
## திராவிடத்தால் வாழ்கிறோம்

992

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

31

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.




# கல்வியை ஆயுதமாக்கிய கா.க.புதூர்!

2016-ஆம் ஆண்டு மார்ச் 13-ஆம் நாள். உடுமலைப்பேட்டையின் பகல்பொழுது காட்சி அது. கடைவீதிக்கு கணவன் - மனைவியாகச் சென்ற இளம் தம்பதியில் ஒருவர் திரும்பி வரும்போது உயிரோடு இல்லை. மற்றொருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில். இறந்தவர் சங்கர், தப்பிப்பிழைத்தவர் கௌசல்யா. காதலித்துத் திருமணம் செய்தார்கள் என்பது கொலைக்கும் கொடுந்தாக்குதலுக்கும் காரணம். ஆனால், உடுமலைப்பேட்டையில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பொள்ளாச்சியை அடுத்த கா.க.புதுரில் (காளியப்பகவுண்டன் புதூர்), அதேகாலகட்டத்தில் மற்றொரு காட்சி. மணப்பெண்ணும், மணமகனும் வேறு வேறு சாதி. எனினும் சாலையில் மேடை அமைத்து, கொளத்தூர் மணி தலைமையில் ஊர்கூடி நடத்திவைத்தது அந்தத் திருமணத்தை.

ஆனால், ஒருகாலத்தில் எப்படி இருந்தது அந்த ஊர்?

சாதிக்கு ஒரு சுடுகாடு என 10 சுடுகாடுகள் இருந்தன. ஆற்றுப் படித்துறையில் எந்த சாதி, எதுவரை செல்ல வேண்டுமென்று கட்டுப்பாடுகள் நிலவின. கோவில் வழிபாட்டில் எல்லோரும் பங்கெடுத்து விட முடியாது. சாலையோரத்தில் உள்ள கால்வாய்த் திட்டுக்களில் கூட தாழ்த்தப்பட்டவர்கள் அமர்ந்துவிட முடியாது. 90-களின் இறுதிவரை நிலவிய களச்சூழல் இதுதான். ஆனால், இரண்டாயிரத்தின் தொடக்கக் காட்சிகள் மெல்ல மெல்ல மாறத் தொடங்கின. காரணம், கருப்புச் சட்டைகள், காரணகர்த்தா காசு நாகராசு.

அவரும் அவரது நண்பர் சுரேஷ் என்பவரும் பள்ளி மாணவர்களாக இருக்கும்போதே கருப்புச் சட்டை அணிந்துவிட்டனர். 1983 ஜூலை மாதம் இலங்கையில் நடந்த தமிழர்கள் மீதான கலவரத்துக்கு எதிராக, தமிழ்நாட்டில் மாணவர்கள் கிளர்ந்தெழுந்தனர். அவர்கள் பெரும்பாலும் அப்போது திராவிடர் கழகத்தினருடன் அணி சேர்ந்தனர். அதில் ஆயிரக்கணக்கானோர் பெரியாரை வாசித்து, திராவிடர் கழகமாகவே மாறினர். அப்படி பெரியாரியவாதி ஆனவர் காசு நாகராசு.

அரசியல் ஈர்ப்பின் காரணமாக கருப்புச்சட்டை அணிந்திருந்தாலும், உள்ளூரில் சாதிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது பள்ளிச் சிறுவர்களான அவர்களுக்கு சிரமமான செயல். 1988-ஆம் ஆண்டு தங்கள் ஊரில் திராவிடர் கழகக் கொடிக்கம்பம் நட முயன்றும் தோல்வியே மிஞ்சியது. ஆனாலும், பெரியார் பிறந்தநாளில் இனிப்பு கொடுப்பது, நினைவுநாளில் அஞ்சலி செலுத்துவது என்ற அளவில் பணியாற்றினர். கருப்புச் சட்டை அணிந்துகொண்டு வெளியூர் நிகழ்ச்சிகளுக்கு செல்வதுதான் அப்போது அவர்களால் முடிந்தது. ஆனால், அதுவும் கூட ஊர்ப் பெரியோர்களுக்கு எரிச்சல் தந்தது.

இந்தச் சூழலில்தான் காசு நாகராசு, சம்பத், ஆதி, உதயகிரி, மாரிமுத்து, அப்புசாமி, கண்ணப்பன் என நண்பர்கள் பலர் இணைந்து, 1998-ஆம் ஆண்டில் தமிழ்நாடு திராவிடர் கழகமாக செயல்படத் தொடங்கினர். உள்ளூரில் துணிந்து சில நிகழ்ச்சிகளை நடத்த முனைந்தனர். சுவர் விளம்பரம் செய்வது, கிடைக்கும் இடங்களில் எல்லாம் பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகளை எழுதி வைப்பது என தங்களை எதிர்த்தவர்களை எதிர்க்கத் துணிந்தனர். அப்படித் துணிந்த போதுதான், தங்கள் ஊரின் அடிமைத்தனத்தையும் அறியாமையையும் போக்க அடிப்படையானது கல்வி என்பது அவர்களுக்குப் புரிந்தது.

1999-ஆம் ஆண்டில் தாய்த்தமிழ்ப் பள்ளி முளைத்தது. மாலை நேர வகுப்புகள் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன. குறிப்பாக, பிற்படுத்தப்பட்டோரையும் தாழ்த்தப்பட்டோரையும் ஒன்றாக அமர்ந்து படிக்கச் செய்தது, பழகும் வாய்ப்பைக் கொடுத்தது. விவசாயிக் கூலிகளாகக் கைகட்டி நின்ற சமூகத்தினரைக் கல்லூரியில் கால் வைக்கச் செய்தது.

பொறுக்குமா ஆதிக்கவாதிகளுக்கு?

...பயணிப்போம்.

## அவர்களுக்கு வெட்கமாக இருக்காதா?

சட்டமன்றத்தில், அ.தி.மு.க.வினர் நடிகருக்கு அடியாள் வேலை பார்ப்பதாக எழுத்தாளர் ம.மதிவண்ணன் சமூகவலைதளத்தில் தனது விமர்சனத்தைப் பதிவு செய்துள்ளார். அவரது பதிவு.

“ஒரு குழந்தை ஆழ்துளைக் கிணற்றில் விழுந்துவிட்டால், ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் எப்படிப் பதைபதைத்துப் போகும்? கரூர் கூட்ட பலியில் பதினைந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மட்டும் எட்டு பேர் இறந்திருக்கிறார்கள். இதுகுறித்துத் தமிழ்நாட்டு மக்கள் பதைபதைத்துப் போய் இருக்கிறார்கள். இன்னும் அதிலிருந்து மீளவில்லை.

‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ என்பது தமிழ்ச் சமூகத்தின் உயர்ந்த அறம். 41 பேரைச் சாகடித்து விட்டு, அதைக் குறித்து அலட்டிக் கொள்ளாமல் டெல்லி எஜமானர்களிடம் டீல் பேசி முடித்துவிட்டு 17 நாட்கள் கழித்து, சவடாலாக விஜய் கும்பல் வெளிவருவது குறித்த எரிச்சலைத் தமிழ் மக்கள் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். சிறு குழந்தையைப் பறிகொடுத்துப் பதறிக் கொண்டிருக்கும் பெண்ணை வஞ்சிக்க, கைவிட்டுச்சென்ற அவளது கணவனைக் கொண்டு வந்து நிறுத்தி அவன் மூலமாகவும், ஆதார் கார்டை கூட அடகு வைத்துப் பிழைக்கும் மனிதனிடம் தனது மனைவி இறந்த துக்கத்தில் இருக்கும் போது, அவனது அறியாமையைப் பயன்படுத்தியும் 41 பேரைக் கொலை செய்த பாதகர்களைத் தப்புவிக்க தகிடுதத்தம் செய்யும் ஈவு இரக்கமற்ற கொடூர நெஞ்சம் யாரிடம் இருக்கும்?

அடுத்தவனின் அவசரத்தை, நெருக்கடியைப் பயன்படுத்தி கடன் கொடுத்து அவனது வாழ்க்கையை, மரியாதையை, உயிரை வசூல் செய்யும் கந்துவட்டிக்காரர்களின் கெடுபிடி யாரிடம் இருக்கும்? மக்கள் விரோதிகளான அ.தி.மு.க.காரர்களிடம் இருக்கும். கும்பகோணம் மகாமகத்தின் போது, வேளாண்மைக் கல்லூரி மாணவிகளை உயிரோடு எரித்துக் கொன்றபோது, கொடநாடு தொடர் கொலைகளின்போது என்று நாம் தொடர்ச்சியாக நாம் பார்த்து வருவது இதைத்தானே. இந்த லட்சணத்தில் 41 அப்பாவி உயிர்களின் ரத்தத்தில் பங்கு கேட்கும்விதமாக, நடிகருக்கு சட்டமன்றத்தில் அடியாள் வேலை பார்க்கிறார்களே அ.தி.மு.க.காரர்கள்!

இவர்களுக்கு வெட்கமாகவே இருக்காதா?” எனக் கேள்வி எழுப்புகிறது, அவரது எழுத்து.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் வழங்கிய கணினி!


த.ஹரிசங்கர்

2000-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, எனது அக்கா மகள் வி.கே.சிந்து, 10 வயதுக்கு உட்பட்டோருக்கான சதுரங்கப் போட்டியில், ஆசிய அளவில் முதலிடம் பெற்றார். அதையடுத்து, தலைவரைப் பார்த்து வாழ்த்து வாங்க, மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களிடம் கூறியதும், அவர் ஏற்பாடு செய்தார். தலைவரைச் சந்தித்தபோது, அவர் என் அக்கா மகளிடம் “உனக்கு என்னம்மா வேணும்?” என்று கேட்டார். சதுரங்கம் விளையாடுவதற்கு கணினி இருந்தால் வசதியாக இருக்கும் என்று கூறினார். அடுத்த வாரமே மீண்டும் வரவழைத்து, தலைவர் கணினி வழங்கியது வாழ்க்கையில் மறக்க முடியாதது.

– த.ஹரிசங்கர், ஒன்றியப் பிரதிநிதி – சிவகிரி பேரூர், கொடுமுடி மேற்கு ஒன்றியம், ஈரோடு மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

81

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''




# நல்லாட்சியில் நலம்பெறும் உள்ளாட்சி!

**ஊரக உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல், கிராமசபைக் கூட்டங்களில் இணையவழியில் முதலமைச்சர் பங்கேற்கிறார் என்று எதிர்க்கட்சிகளும் ஒரு சில பத்திரிகையாளர்களும் கேள்வி எழுப்பினார்களே?**

உள்ளாட்சித் தேர்தல் என்றாலே, அதைத் திறம்பட நடத்துவது தி.மு.க. அரசுதான். அ.தி.மு.க. ஆட்சியில் எம்.ஜி.ஆர். மூன்று முறை முதலமைச்சராக இருந்தும் ஒரே ஒரு முறைதான் உள்ளாட்சித் தேர்தலை நடத்தினார். 1986-இல் சென்னை மாநகராட்சியைத் தவிர்த்துவிட்டு, நகராட்சிகள், ஊராட்சிகளுக்கு அவர் நடத்திய தேர்தலில், தி.மு.க.தான் மகத்தான வெற்றி பெற்றது. 1991-96-இல் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சித் தேர்தலே நடைபெறவில்லை. அதன்பிறகு, 1996-இல் கலைஞர் முதலமைச்சரானவுடன், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டுடன் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் என அனைத்து நிலையிலும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு, உரிய முறையில் தேர்தல் நடத்தி, மக்கள் பிரதிநிதிகளின் ஜனநாயக மன்றமாக உள்ளாட்சி அமைப்பைக் கட்டமைத்தார். அதன்பிறகே, உள்ளாட்சித் தேர்தல்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் வழக்கம் மீண்டது.

2016 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தபோது, அந்த ஆண்டு அக்டோபரில் நடைபெறவேண்டிய உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவில்லை. மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், அதிகாரிகளைக் கொண்டு நிர்வாகத்தை நடத்தும் ஜனநாயக விரோதப் போக்கையே தொடர்ந்து மேற்கொண்டது. 2020-ஆம் ஆண்டு, எடப்பாடி பழனிசாமி அரசு, உள்ளாட்சித் தேர்தல்களை முழுமையாக நடத்துவதற்குத் தயங்கி, ஊரகப் பகுதிகளுக்கான உள்ளாட்சித் தேர்தல்களை மட்டும் நடத்தியது. அதாவது, கிராமப்புற மக்களிடம் ஆளுங்கட்சி, கோதாவில் ஓட்டு வாங்கிவிடலாம் என்பதுதான் பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசின் சுயநல எண்ணம். அதற்கான வாக்குப்பதிவின்போதும், வாக்கு எண்ணிக்கையின்போதும் அ.தி.மு.க.வினர் பல அராஜகங்களைச் செய்தனர். ஆனாலும், ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியே அதிக இடங்களில் வெற்றி பெற்றது. 6-வது முறையாக தி.மு.க. ஆட்சி அமைந்ததும், பெண்களுக்கு 50% இடஒதுக்கீட்டுடன் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, சென்னை உள்பட பல மாநகராட்சிகளிலும், பல நகராட்சிகளிலும் பெண் மேயர்களும் பெண் சேர்மன்களும் பொறுப்பேற்றனர்.

மக்கள் நலனைப் புறக்கணித்து, சுய நலத்திற்காக விதிகளை மீறி செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு உள்ளாட்சி அமைப்புகளை மக்கள் மன்றமாக மாற்றியிருப்பது, தி.மு.க. அரசு. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பதவிக்காலம் இன்னும் முடிவடையவில்லை. எனவே, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முன்பு போல ஒன்றாகவும்-முறையாகவும் தேர்தல் நடைபெறும். ஊராட்சிகளில் வாழும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகள், முன்னேற்றங்கள், சமுதாய வளர்ச்சி ஆகியவற்றில் எவ்வித தொய்வுமின்றித் தொடரும் வகையிலேயே 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஊராட்சிகளின் கிராமசபைக் கூட்டத்தை இணையவழியில் ஒருங்கிணைத்து, முதலமைச்சரே பங்கேற்ற வரலாற்று நிகழ்ச்சி, 11-10-2025 அன்று நடந்தது.

...வினா தொடரும்.

## ம்லவுருக

### அண்ணாவுக்குக் கடுங்காவல் தண்டனை!

1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டு, பேரறிஞர் அண்ணா சிறையில் அடைக்கப்பட்டார். 02.08.1962 அன்று அண்ணா மீது தொடரப்பட்ட வழக்கு, விசாரணைக்கு வந்தது. வேலூர் நீதிபதி கே.வி.சம்பந்தம் வழக்கை விசாரித்தார். இந்த வழக்கில், அண்ணா அவர்களே வாதாடினார்கள். 16.08.1962 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில், அண்ணாவுக்கு 10 வாரம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131